Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO.108/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 3, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சீனிவாசன் | தொழில் | டிரைவர்(பள்ளி வாகனம்) |
| கிராமம் | கோனேரிகுப்பம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 04 day of February 2025

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை )**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் நாட்றம்பள்ளியில் உள்ள வேதா பள்ளியில் பள்ளி வாகனம் ஓட்டி வருகிறேன். அ.சா.1 ஞானலட்சுமி எனது தாயார் ஆவார். என் தாயாரின் சொந்த இடமான 63 1/2 சென்ட் எனது தந்தை எம் அம்மாவுக்கு உயில் சாசனம் மூலம் கொடுத்தது ஆகும். அந்த இடத்தில் என் அம்மா 16.07.2017 பகல் 12.00 மணிக்கு ஏர் உழவதற்காக சென்றார். ஏர் உழவதற்காக அதில் உள்ள பிளாஸ்டிக் பைப்பை எடுத்துகொண்டிருந்தபோது மூர்த்தியின் மனைவி திலகவதி மற்றும் துளசியம்மாள் என் அம்மாவை கலுகட்டாலும், கல்லாலும் அடித்தார்கள். அந்த சமயம் நான் 100 மீட்டர் தூரத்தில் இருந்தேன். அப்போது அங்கிருந்த சசிகலா, ஆறுமுகம் சண்டையை விலக்கிவிட்டார்கள். அப்போது எதிரிகள் இருவரும் என் அம்மாவை தேவிடியா என்று அசிங்கமாக திட்டினார்கள். பின்னர் காயம்பட்ட என் அம்மாவை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தேன். என்னுடைய அம்மாவிற்கு வாயில் மற்றும் வலது கை மற்றும் இடுப்பில் காயம் ஏற்பட்டிருந்தது. என் அம்மா அரசு மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். மருத்துவமனையில் இருந்த சமயம் என் அம்மாவை ஜோலர்பேட்டை போலீசார் விசாரணை செய்தார்கள். துளசியம்மால் மீதும் திலகா மீதும் புகார்

கொடுக்கப்பட்டது. போலீசாரிடம் கலுகட்டை எனது அம்மா ஒப்படைத்தார். அந்த கலுகட்டை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் கலுகட்டால் தான் என் அம்மாவை அடித்தார்கள். இந்த சம்பவம் மூர்த்தி தலைமையில் தான் நடந்தது. மூர்த்தி என்பவர் காவல் துறையில் வேலை செய்கிறார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

துளசியம்மாள் யார் என்றால் எனக்கு ஆயா ஆவார். அவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது தோராயமாக 90 இருக்கலாமா என்றால் இருக்கலாம். அவர் தற்சமயம் முட்டிவலியால் நடக்க முடியாமல் வீட்டோடு இருக்கிறார் என்றால் இல்லை நல்லாதா'ன் உள்ளார். என் அம்மாவை அடித்த விவரம் எப்போது தெ்ரியம் என்றால் 12.10 தெரியவந்தது. என் அம்மாவை அடிக்கும்போது நான் அங்கு இல்லை என்றால் 100 மீட்டர் தொலைவில் இருந்தேன். என் அம்மாவை யார் மருத்துவமனையில் சேர்தார் என்றா'ல் நான் தான்சேர்த்தேன். என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் வாங்கினார்கள். அந்த வாக்குமூலுத்தில் நான் சம்பவயிடத்தில் இல்லை என்றும், விவரம் தெரிந்துதான் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சம்பவயிடத்தில் இல்லை 100 மீட்டர் தொலைவில் இருந்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காமல் என் அம்மாவிற்க்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.